# மாவட்ட நீதிமன்றம், நாகப்பட்டினம்

## Probate O.P. No. 167–2024

**நாள்:** 14.11.2025

**பெயர் : ஜெயவெங்கடேஷ்**

**PW: 1**

**<u>குறுக்கு விசாரணை</u>**

நான் இந்த மனுவை நிர்வாக உரிமை கோரி உயில் அடிப்படையில் தாக்கல் செய்துள்ளேன். ஆனால் அந்த உயில் இவ்வழக்கில் ஆவணமாக இன்னும் குறியீடு செய்யவில்லை. நான் தாங்கள் செய்த இதர குறியீடு செய்யப்பட்ட ஆவணங்களும் உயில் தொடர்பாக ஏற்பட்ட பிந்தைய ஆவணங்கள் தான். உயில் குறியீடு செய்யபடாமல் உங்களை இந்த வழக்கில் குறுக்கு விசாரணை செய்யமுடியாது என்று சொன்னால் தவறு. உயில் தொடர்பாக உயில் குறியடு செய்யபடாமல் எதிர்மனுதாரர்கள் தரப்பில் எந்தவிதமாக சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய இயலாது என்பதால் உங்களை தற்போது குறுக்கு விசாரணை செய்ய இயலாது என 1ம் எதிர்மனுதாரர்கள் தெரிவிக்கிறார்கள் என்று சொன்னால் தெரியவில்லை. உங்களை உயில் குறியீடு செய்யப்பட்ட பின்பு தான் குறுக்க விசாரணை செய்ய வேண்டும் என 1ம் எதிர்மனுதாரர் மேல் குறுக்கு விசாரணையை பின்னிட்டு குறியீடு செய்ய இருக்கிறார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.